**26.03.2026**
**C.C. No. 12/2024**

**ம.சா. 1 சுப்பிரமணியன், த/பெ. முத்துப்பெருமாள், 63/2026, அரியக்குடி**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை**

**1) நான் அரியக்குடியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் என் மருமகன் நாராயணமூர்த்தி மூலமாக தெரியும். எதிரி மின்னிட்டான்குடியை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரியின் குடும்பம் பற்றிய விபரம் எனக்கு தெரியாது என் மாப்பிள்ளைக்குதான் தெரியும். சுமார் 7–8 வருடங்களாக தெரியும். எதிரி எந்த தேதியில் எங்கு வைத்து என்னிடம் பணம் கேட்டார் என்றால் 2022 ஜூன் 3 வது வாரத்தில் பணம் கேட்டார். 26.06.2022 ல் கேட்டார். நான் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். அப்போது என் மனைவி உடன் இருந்தார். நான் என் மனைவியை சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் என் மனைவியை விசாரிக்க தேவையில்லை. எதிரி என்ன தேவைக்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால் சில்லரை கடன்களை தீர்ப்பதற்காக என்னிடம் கடன் கேட்டார். நான் வட்டிக்கு பணம் கொடுத்தேனா என்றால் வட்டிக்கு கொடுக்கவில்லை. அவராக வட்டி தருவதாக கூறினார். நான் பணம் கொடுக்கும்போது நான் வட்டி தொகை எதுவும் எடுக்கவில்லை. எதிரி எனக்கு உறவினர் இல்லை. பழக்கம் மட்டும்தான்.**

**2) நான் பணம் கொடுத்த தேதியில் ஆவணம் எதுவும் பெற்றேனா என்றால் ஆவணங்கள் எதுவும் பெற்றுக்கொள்ளாமல் பணம் கொடுத்தேன். காசோலையை எதிரி எப்போது கொடுத்தார் என்றால் பணம் பெற்றபின்னர் ஒரு மாதத்தில் தருவதாக கூறினார் ஆனால் பலமுறை கேட்டபின் 1 வருடம் கழித்துதான் கொடுத்தார். இடைப்பட்ட காலத்தில் நான் எனது பணத்தையும் வட்டி தொகையையும் திரும்ப பெறுவதற்கு எந்த வித சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு கொடுத்த பணத்தை எத்தனை கட்டுகளாக எந்த வகை நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் எத்தனை கட்டுகள் கொடுத்தேன் என்பது நினைவில்லை**

ஆனால் 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். எதிரிக்கு கொடுத்த பணத்தை நான் வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் வங்கியில் இருந்து பணம் எடுத்துக்கொடுத்தற்கு ஆதரவாக எனது வங்கி கணக்கை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். வங்கியில் இருந்து எடுத்த பணம் கடன் கொடுத்த தேதியில் எடுத்தேனா என்றால் இல்லை 1 வாரகாலத்திற்கு முன்பு எடுத்தேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் 2015ற்கு பின்னர் உடற்பயிற்சி நிலையம் வைத்துள்ளேன். அதற்கு முன்னர் நான் மஸ்கட்டில் 30 வருடங்களாக பணியில் இருந்தேன். நான் வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் வருமானவரி தாக்கல் செய்வில்லை. எனக்கு ரூ. 10 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றாலும் நான் வெளிநாட்டில் வேலை செய்து பணம் சம்பாதிக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு ரூ. 10 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு போதிய வருமானம் உண்டு என்பதை நிரூபிக்க போதிய ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் உள்ளது என்றால் சரிதான். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் தெரியாது அவருக்கு எவ்வளவு வருமானம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மாப்பிள்ளைக்குதான் விபரம் தெரியும்.

3) எதிரி குறிப்பிட்ட காலத்தில் பணத்தை திருப்பி தராததால் என் மாப்பிள்ளையை வைத்து கேட்டேன். கொடுக்கல் வாங்கல் விபரம் என் மாப்பிள்ளை நாராயனமூர்த்திக்கு தெரியும். எனது மாப்பிள்ளையை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேன். எதிரி எந்த தேதியில் காசோலையை கொடுத்தார் என்றால் 26.07.2023ல் கொடுத்தார். எதிரி என்னிடம் சருகணி கிளை இந்தியன் வங்கி காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தார். எதிரி காசோலையை பூர்த்தி செய்துகொடுக்கவில்லை என்றாலும், அதில் உள்ள கையொப்பம் எதிரியுடையது இல்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் பெயர் மற்றும் தொகை ஒரு மையினாலும், கையொப்பம் வேறு மையினாலும் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடையது இல்லை என்பதை நிரூபிக்க கைரேகை நிபுனருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

4) வழக்கு காசோலை எந்த வங்கியில் இருந்து திருப்பப்பட்டது என்றால் எனது வங்கியான யூகோ வங்கியில் இருந்து திருப்பப்பட்டது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் உடன் பிறந்த அண்ணன் சேதுராஜனை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் மாப்பிள்ளைக்குதான் தெரியும். என் மாப்பிள்ளை 2021-2022ல் காரைக்குடி பொன் நகரில் வீடு கட்டினார் என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு கட்டிட பொறியாளராக சேதுராஜன் பணி செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் வரவு செலவு இல்லை என்றாலும், எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும் சரியல்ல. எதிரியின் அண்ணனர் சேதுராஜன் என் மாப்பிள்ளையின் வீட்டை கட்டி தருவதாக கூறி ஒப்பந்தம் செய்து வீடு கட்டி வந்தார், இடையில் கட்டிடத்திற்கு தேவையான மூலப்பொருட்கள் வாங்கி தருவதாகவும் அதற்கு பாதுகாப்பிற்காக பூர்த்தி செய்தும், கையொப்பம் செய்யாமலும் கொடுத்த காசோலையை கொடுத்ததார். என் மாப்பிள்ளைக்கும் எதிரியின் அண்ணுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக கையொப்பமிட்டு காசோலையை பூர்த்தி செய்து, என் மாப்பிள்ளை சொல்லி நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை எதிரி என்னிடம் நேரடியாக கொடுக்கவில்லை என்றாலும், காசோலைக்கு எந்தவிதமான சட்டப்படியாக மறுபயனும் கிடையாது என்றாலும், இதுபோன்ற மிகப்பெரிய தொகையை ஆவணங்கள் இல்லாமலும், வட்டியில்லாமலும் கொடுப்பது சாத்தியம் இல்லை என்றால் சரியல்ல.

5) நான் பைனான்ஸ் தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். போதிய வருமானம் இல்லாமலும், எதிரியை பற்றி விபரம் எதுவும் தெரியாமலும், பெரிய தொகையை கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த வித முன்விரோதம் இல்லை என்றாலும், என் மாப்பிள்ளைக்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகார் மனுவில் வட்டி தொகை எதுவும் பெறவில்லை என்பதற்கான விபரத்தினை சொல்லவில்லை

**என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.26 17:05:19 +0530

நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)